460

# ஆத்மஜோதி



பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்ஸர்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு


எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே — சுத்தானந்தர்


சோதி 5 | நந்தன வரு மாசிமாசம் திகதி 1 | சுடர் 4


## பொ[illegible]ளடக்கம்.


| | | |
|---|---|---|
| நெஞ்சே நீ நினையாய்! | ... | 85 |
| விவேகா[illegible]கிய வீரமுரசு | .... | 86 |
| இராமகி[illegible]ணரின் அவதாரமகிமை | ... | 87 |
| அர்ச்சனைமாலை | .... | 89 |
| [illegible]ப்பமில்லை! | ... | 93 |
| [illegible]நட்பா விளக்கம் | .... | 94 |
| [illegible]டவுளைப்பெற்றால் கவலைக்கிடமில்லை | ... | 99 |
| [illegible]ன் நினைவு ஒரு நந்தாவிளக்கு | ... | 97 |
| [illegible]மஹம்ஸர் திருவாய்மொழிகள் | ... | 102 |
| [illegible]கிட்டம் | ... | 103 |
| [illegible]கால் துதிப்போம் | ... | 106 |
| [illegible]ரஸ சன்மார்க்கம் | .... | 107 |
| [illegible]புச்செல்வமும் சுத்தானந்தமும் | .... | 109 |
| [illegible]ந்திபப்பாணி செய்வோம் | ... | 111 |
| [illegible]ளுவர் திருநாள் | — | 1 2 |



## ஆத்ம ஜோதி

✻ ஆயுள்சந்தா ரூபா 75/- ✻ வருடசந்தா ரூபா 3-'

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்
நம் 60 டீல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு
பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.


## நெஞ்சே நீ நினையாய்! போற்றாய்!

வேதகமலங்கள் விரித்த பொருள்களெல்லாம்
ஓதாதுணர்ந்த உரவோனை-மாதா[illegible]வ[illegible]
றித்தலைத்துமங்கையர்கள் யாவரையுங்[illegible]ண்போனை
நித்தமுமென் னெஞ்சே நினை.

எங்குநிறைபொருளாய்எப்பொருட் கும்மேற்பொருளாய்
தங்கும்தனிப்பொருளின் தண்ணருளால் பொங்குபுகழ்
மாதவன் ராமகிருஷ்ணன் வாய்மலர்ந்த பொன்மொழியைப்
போதுமென் னெஞ்சே நீ போற்று,

[கவிமணி தே-வி

மனிதரின் பாபம்போக்க மகிழ்ச்சியோ டுயிரைத்தந்த
மாபெரும் த்யாகமூர்த்தி ஏசுவின் அன்பாம்நெய்யைத்
தனிவரும் துறவியென்று தரணியோர் யாரும்போற்றும்
சாக்தனும் புத்ததேவன் தவமெனும் தட்டிலூற்றி
இனியொரு மனிதற்கில்லை இத்தனை பொறுமையென்னும்
எம்பிரான் மஹம்மத் நீட்டும் சமரஸக்கைகள் ஏந்தச்
சினமெனும் அரக்கர்கூட்டம் திரியென எரியும்ஞானத்
தீபமே ராமக்ருஷ்ண தேவனே போற்றி போற்றி!

[நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை]

# பாரத மக்களுக்கு விவேகானந்தர் விளக்கிய வீரமுரசு.

## பாரதநாட்டின் புத்திரனே!

உனது தேசத்தின் பெண்மைக்கு அணிகலமாக இலங்குபவர்கள் சீதையும் சாவித்திரியும் தமயந்தியும் என்பதை மறவாதே. நீ வணங்கும் கடவுள், முனியர்களுக்கு முனிவராகிய தியாகராஜர், முற்றத்துறந்த சங்கரர்; உமாபதி என்பதை மறவாதே. நீ மணம் புரிவதும் பொருள் தேடுவதும், உயிர்வாழ்வதும் வெறும் சிற்றின்ப போகத்துக்காகவோ அல்லது உனது தனி உரிமைக்காகவோ அல்லவென்பதை மறவாதே. அகிலாண்ட நாயகியின் அடியிணைக்கு அர்ப்பணமாக நீ பிறந்துள்ளாய் என்பதை மறவாதே, உனது லௌகிக நடை முறையெல்லாம் ஜகன்மாதாவின் பிரதி பிம்பம் என்பதை மறவாதே: அறிவிலிகள், வறியர், கல்லாதவர், சக்கிலியர், பறையர்கள் எனப்படுவோர் எல்லாரும் உனது உற்றார், உறவினர், உடன் பிறந்தார் என்பதை மறவாதே.

அஞ்சுதல் அறியா நெஞ்சம் படைத்தோய்! ஆண்மைகொள்; துணிவுகொள்; நீ ஓர் இந்தியன் என்பதைப்பற்றி பெருமை பாராட்டு, "நான் ஓர் இந்தியன்; ஒவ்வொரு இந்தியனும் எனது சகோதரன்" என்ற பெருமையுடன் பகர்வாயாக. "கல்லாத இந்தியன்; தரித்திர இந்தியன், திக்கற்ற இந்தியன், பிராம்மண இந்தியன், பறைய இந்தியன் எல்லா இந்தியர்களும் எனது சகோதரர்களே' என்றுசொல். அவர்கள் போன்று உடுக்கக் கந்தையொன்றே உனக்குப் போதுமானது. "இந்தியன் எனது சகோதரன்; இந்தியனே எனது உயிர்; இந்தியாவின் தேவதைகளே நான் வணங்கும் கடவுள்; பிள்ளைப்பருவத்தில் எனக்குத்தொட்டிலாயிருப்பதும், யௌவனத்தில் இன்பம் துய்ப்பதற்கேற்ற நந்தவனமாயிப்பதும், எனது முதுமைக்கேற்ற சுவர்க்கமாயிருப்பதும் இந்திய சமுதாயமே. நாட்டுக்கு நலன் தருவது எதுவோ அதுதான் நான்வேண்டுவதும்' என்று உரத்தகுரலில் முரசு அறை "அகிலாண்ட நாயகியே! ஆண்மை எனக்கு அளித்தருள். விலிவு பிறப்பிப்பவளே! எனது மெலிவைக் களைந்திடு, தளர்வைத் தகர்த்திடு. உறுதியை ஓம்பி என்னை ஆண்மகனாக ஆக்கிவிடு" என்று அல்லும் பகலும் வழுத்தி நீ வேண்டிடுவாயாக!



# இராம கிருஷ்ணரின் அவதார மகிமை.

[ஆசிரியர்]

பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் கிடக்கின்றது, அதை வாரியுண்ண "சேரவாரும் சகத்தீரே!" என உலகை அழைத்தார் தாயுமானவர், பதினெட்டாம் நூற்றாண்டில் அவரது சூழலும் காலப்போக்கும் அந்த அறைகூவலுக்குச் செவி சாய்க்கவில்லை. சற்றேறக்குறைய நூற்றிருபது வருடங்களுக்குப் பின், அதேயழைப்பு இரு தீர்க்க தரிசிகள் வாக்கிலிருந்துமறுபடியும் வெளிவந்தது: ஒருவர் 1823-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய இராமலிங்கசுவாமிகள்; மற்றையவர் 1836-ம் ஆண்டில் வங்கத்தில் உதித்த ஞானபானுவான இராம கிருஷ்ண தேவர் இருவரும் உடல் கொண்டுலாவியது ஐம்பது வருஷங்களேயாம். ஆனால் அந்தச்சுருங்கிய கால எல்லைக்குள், அத்யாத்ம துறையில் அற்புத சேவைசெய்துள்ளனர். ஆகையால் இருவரும் இன்று பாரததேசத்தின் பாரமார்த்திக விண்ணில் ஜோதியாகவிளங்குகின்றனர்.

அருட்பிரகாச வள்ளலார் பரம்பொருளை வள்ளலாகச் சிந்தித்தார். பரமஹம்ஸதேவர் தாயாக வந்தித்தார். முந்தியவர் "தில்லையப்பனே! என்னை நீ விட மாட்டாய்; நான் உன்னை விடமாட்டேன்" என்ற உறுதிகொண்டு அருட்பெருஞ் சோதி தரிசனம் பெற்று பூரணம் பெற்றார். அவரது உபதேசங்களடங்கிய அருட்பா அந்நிறைவிலிருந்து பெருக்கெடுத்து வழிந்ததேயாம். அவரது உபதேசங்கள் பாவடிவில் அமைந்த காரணத்தாலும், தமிழ்நாட்டின் தவக்குறைவால் அவருக்கு விவேகானந்தர் போன்ற வீரசிங்கம் சீடராக வாராமையாலும், தமிழ் வழங்கும் நாட்டின் எல்லைக்குள் தங்கிவிட்டன. எனினும் அவற்றுள் அடங்கிய சமரஸ சன்மார்க்க நெறியும் ஆன்மநேய ஒற்றுமையும் உலகெங்கும் பரவியே வருகின்றன, பரமஹம்ஸதேவர் "அம்மா! உன்னைக் கண்ணாரக்காணவேண்டும். வா! வா! உன்னைக் காணாது ஒருகணமும் தரியேன். எனக்கதறி பராசக்தியைச் சாட்சாத்கரித்தார். கற்சிலையில் ஜகந் மாதாவைக் கண்டார்; அவளுடன்

பேசினர். விக்கிரக வழிபாடு அனாகரிகமானதெனப் பிரசாரஞ் செய்த இந்துப்பிரமுகர் பலர்க்குத் தமது அனுபவங் கொண்டு நல்லறிவு புகட்டி அவர்களின் மயக்கந்தீர்த்தார்:

சகல சித்திகளும்கைவரப்பெற்றபின், "குழந்தைகளே! வாருங்கள், உங்களுக்காகக்காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று தக்ஷிணேச்வர ஆலயத்தின் கோபுரத்திலிருந்து அறைகூவினர். அவர் பணிக்கெனவே பிறவியெடுத்த அநேக இளம் சிங்கங்கள் உற்றார் உறவினர்களையும் உலகபோகத்தையும் துறந்து அவர் திருப்பாதங்களில் சரண் அடைந்தனர். அவர்களின் தலைவரான விவேகானந்தர் மூலம் குருதேவரின் ஒப்புயர்வற்ற உபதேசமணிகள் உலகில் நாற்றிசைகளிலும் அள்ளி வழங்கப்பட்டன. அதன் பலனாக பிறநாட்டார் நமது சனாதன தர்மத்தின் தனிப் பெருமையை ஒருவாறு அறியத்தொடங்கினர்.

நமது சமய சாஸ்திரங்களை ஆர்வத்துடன் படிக்கவும் ஆரம்பித்தனர். இந்துமதத்தின்மீது நெடுங்காலமாக பிறமதத்தினர்கொண்டிருந்த துவேஷ மனப்பான்மையும் தப்பபிப்பிராயமும் நாளடைவில் அருகின. இவ்வளவிற்கும் மூலகாரணம் ராமகிருஷ்ண தேவரின் ஆத்மீக சக்தியும் அனுபவ சித்தியுமேயாம், எவரும்விளங்கக்கூடிய எளிய இனிய வசனங்களில், உபகதை ரூபமாகவும், சாதாரண உபமானங்களுடனும் அவர் தமது தாய்மொழியாகிய வங்காளத்தில் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்கள்எந்தமொழியில் மொழி பெயர்க்கப்பட்டாலும் எழில் குன்றாப் பெருமையுடையன. இக்காரணம்பற்றியே அவை இன்று உலக மக்களின் கவனத்தைக் கவருஞ் சிறப்பையடைந்துள்ளன.

எனவே, இராமகிருஷ்ணதேவர் இந்துமக்களின் மூவாயிரம் ஆண்டுத்தவத்தின் பயனாக அவதரித்த மகாபுருஷன் என்றகூற்று மிகையாகாது. அவரின் வரலாற்றையும் உபதேசத்தையும் ஓர் அர்ச்சனைமாலையாக இங்குத்தருகிறோம். அதிலுள்ளகுற்றத்தை மறந்து குணத்தைப் பாராட்டுவது அறிஞர் கடமை. பள்ளிக்கூட மாணவர்களும் மாணவிகளும் பரமஹம்ஸர் வரலாற்றை மனனம் பண்ண உதவிசெய்யவே இந்த முறையைப் பேணியுள்ளோம்.



## ஸ்ரீராம கிருஷ்ண தேவர்
# அர்ச்சனை மாலை.

கங்கை நதிபாய் வங்கஞ் செழிக்கவும்
ராமா னந்தனுங் கிராமத் தலைவனின்
தீச்செய லதனால் திரைப்பூ சிழந்த
திருவைக் காமர்ப் புகூர்பெற் றுய்யவும்
"காண்பா ரின்றியும் காப்பா ரின்றியும்
பன்னாள் ஈண்டுப் பட்டினி உற்றேன்
கொண்டுபோ என்னை நின்மனைக்" கென்ற;
ரகுவீரர் மீது இடையறு அன்புகொள்
குதிராம் சட்டஜீ குலமது தழைக்கவும்;
சந்திர மணியின் இல்லஞ் சிறக்கவும்
வந்தவ தரித்த வரதனே போற்றி!
தற்சிறப் பிழந்தே, தாழ்வுற் றிருந்த
கற்பகப் பாதநற் கதிதனைப் பெற்றிட
உற்பவித் திட்ட உத்தமா போற்றி!
தற்சிறப் பிழந்தே தாழ்வுற் றிருந்த
கற்பகப் பாதநற் கதிதனைப் பெற்றிட
உற்பவித் திட்ட உத்தமா போற்றி!
பிறந்ததும் வாழ்வின் முடிவைத் தெரிதர
நீறு பூசிய நின்மலா போற்றி!
காசினி புரக்கக் காயாவி லமர்ந்த
கார்வண்ண மேனியன் கருணையை விளக்க
கதாதரப் பெயரே சூடினை போற்றி!
சிறுவய சதனில் துறவிகள் தமது
உறவின் பெருமை உணர்ந்தனை போற்றி!

சிவராத் திரியன்று சிவனாக நடித்து
பவசமா தியால்மெய் மறந்தனை போற்றி!
ராச மணிப்பேர் ராணியின் கொடையால்;
தக்கணேச் வரத்தில் தனிச்சிறப் புற்ற
முக்கணி கோயிலில் அர்ச்சக ராகி,
புகழிழந் திருந்த பூசகர் தொழிற்கு
புனிதமும் பெருமையும் அளித்தனை போற்றி!
பவதா ரணிபதம் புகலாய்க் கொண்டு
நவமான சித்திகள் நண்ணினை போற்றி!
அதேகேஷத் திரத்தில் அரும்பெருந் தவங்கள்
பன்னி ராண்டு பயின்றதன் பயனாய்,
மன்பதைக் குய்நெறி மலர்ந்தனை போற்றி!
பெண்ணுடை யுடுத்துப் பெண்போல் நடந்து
கண்ணன் காதலில் ராதையாய் வாழ்ந்து
பிரேமையின் மகிமை விளக்கினை போற்றி!
ஆண்டான் அடிமைத் திறந்தனை உணர்த்த
அனுமானாய் ராமனை அடைந்தனை போற்றி!
சிங்கவா கினியமர் ஜெயராம் பட்டியில்
இராமச் சந்திர மஹோபாத் யாயரின்
அருந்தவப் பேற்றால் வருந்திரு வான;
சாரதா மணியைத் தாரமாய்க் கொண்டு
"பவன் பிரம்மசாரி பான்மொழி கன்னி'
எனும்பழம் வாக்கின் இலக்கிய மிதுவென
இல்லறம் துலக்கிய இறையே போற்றி!
சகதர் மணியாம் சாரதா தேவியை
ஜெகதாம் பிகையாய் சிரத்தையோ டேத்தி
சோடசி பூஜை புரிந்தனை போற்றி!
தோதா புரியாம் துறவி தன்னையும்
மாதா வான பைரவி யாளையும்,
குருவாய்ப் பேணி குருவாய் அவர்க்கும்
அரும்பெரும் உண்மைகள் அருளினை போற்றி!



வித்தையி லொப்பிலா விவேகா னந்தன்
பத்தியில் முதிர்ந்த பிரம்மா னந்தன்
சத்தி உபாசனாஞ் சாரதா னந்தன்
சுத்த யோகியாம் சிவானந்த வாணி
புத்தியிற் சிறந்த அபேதா னந்தன்
பணிபுரி ராம கிருஷ்ணா னந்தன்
துரியா னந்தன் பிரேமா னந்தன்
எழுத்தறி வற்றும் ஏவலே புரிந்தும்
பழுத்த ஞானியாம் அற்புதா னந்தன்
எனும்பல உத்தம சீடரத் னங்களை
ஏற்றருள் சுரந்த ஏந்தலே போற்றி!
அன்னார் மூலம் அவனி யெங்கும்
பாரத நாட்டின் பரமார்த் திகத்தைப்
பரப்புதற் கிசைந்த பகவனே போற்றி!
சியாமப் புகூரிலும் காசிப் பூரிலும்
வாழ்ந்த காலத்தில் வரையறை யின்றி
வள்ளல்போல் ஞானம் வழங்கினை போற்றி!
வாய்பேச முடியா வருத்தமுற் றிருந்தும்
நோயின் கொடுமையை நோக்கா தன்பர்க்கு
தாய்போற் கருணை காட்டினை போற்றி!
வேதம் ஆகமம் உபநிஷத் கீதை
இதிகாசம் புராணம் எல்லா வற்றிலும்
அடங்கிய தத்துவ மனைத்தையும் எவரும்
அறியும் வண்ணம் அற்புத முறையில்
உபகதை மூலம் உரைத்தனை போற்றி!
சரியை கிரியை சாற்றிடும் யோகம்
உரியநல் ஞானம் எனும்பாதை நான்கையும்
அனுஷ்டானந் தன்னால் அருளினை போற்றி!
சைவம் வைணவம் சாக்தம் கிறிஸ்தவம்
இஸ்லா மாகிய எல்லா மதங்களின்
உண்மையைச் சாதனை உறுதியால் கண்டு

சமரஸம் அருளிய ஜகத்குரு போற்றி!
சாமியின் பேரால் சண்டையை மூட்டிப்
பூமியைக் கெடாதீர் என்றனை போற்றி!
அத்வைதம் துவைதம் விசிட்டாத் துவைதம்
எனுப் வாதம் வீணென் றியம்பினை போற்றி!
சகுண நிர்க்குணச் சண்டையை விடுத்து
பக்திசெய் வீரெனப் பகர்ந்தனை போற்றி!
இக்கலி யுகத்தில் இறைநாம ஜெபமே
இனியசா தனையென் றுரைத்தனை போற்றி!
சாதனை யற்ற சாஸ்திரப் படிப்பால்
ஆவது வாதென் றறைந்தனை போற்றி!
பெண்ஆண் அலியெனும் பெற்றிய போற்றி!
கண்ணனே டொன்றிய ராமனே போற்றி!
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி!
தன்னிக ரில்லாத் தற்பரா போற்றி!
சச்சிதா னந்த சற்குரு போற்றி!
போக்கு வரவிலாப் பொருளே போற்றி!
வாக்கும் மனமுங் கடந்தாய் போற்றி!
பக்தனே போற்றி! பகவனே போற்றி!
முத்தனே போற்றி! முதல்வனே போற்றி!
சின்மய போற்றி! நின்மல போற்றி!
விமலா போற்றி! வித்தகா போற்றி!
ஸ்ரீராம கிருஷ்ண தேவனே போற்றி!
போற்றி! போற்றிநின் பொன்னடி போற்றி!
போற்றி! போற்றிநின் பொன்னருள் போற்றி!!!

## துன்பமில்லை!

துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

அன்பு ஞான ஜோதியை
அடைந்திடில் நந் நெஞ்சமே
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

இன்ப ராம கிருஷ்ணரின்
இணைச்சரண் பிடித்திடில்,
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

வன்பகை வணங்கு தூய
வள்ளலைப் பணிந்திடில்,
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

விண்புகழ்மெய்ஞ் ஞானசக்தி
வீரனைத் தொடர்ந்திடில்
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

மன்பதைக்கெ லாம் அருள்
வழங்கு வானைஅண்டிடில்
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

அம்புவி அனைத்தும் வென்ற
வன்புகழ் உரைத்திடில்
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே;

என்பெலாம் உருக்கும் ஐயன்
இன்பநாமம் உண்டிடில்
துன்மில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே.

அன்புடன் அவனடிக்
கனைத்தும் அர்ப்பணித்திடில்
துன்பமில்லை துன்பமில்லை
துன்பமென்ப தில்லையே!

# அருட்பா விளக்கம்.

[திரு கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள்]

முன்னுரை

சத்திய ஞான சமரஸ சபையிற் சாதனம் புரிந்தோரு குலமாய்
ஒத்தினிது இந்த உலகெலாம் வாழ, உயிர்க்குலம் கருணையில் ஓங்க
சுத்தசன் மார்க்கச் சுடரொளிகாட்டி அருட்பெருஞ்சோதியாம்தூயன்
நித்தியம் எனதுநெஞ்சிலேபேசி நிலவுக செயலிலே நீடு.

ஆன்ம நேயர்காள், எல்லோருக்கும் வணக்கம். அனைத்தும் வாழ்க! இந்தப்புனிதச் சபைமுன் நிற்கையில் என் உள்ளம் சிலிர்க்கிறது. உயிர் சிலிர்க்கிறது. மனம் எண்பதாண்டுகளுக்கு முன் இங்கே விளக்கிய அருள் விளங்கை நாடுகிறது ......நாவு துதிக்கிறது.

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதி சிவமே'
அருளமுதே அருள் நிறைவே, அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே.
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசே நான் செய்மொழிகேட் டருளே.

இதுதான் வள்ளலார் சத்திய ஞான சபையில் பாடிய அருள்விளக்கப்பாடல். இதுவே நான் அவரைத் துதிக்கும் பாட்டாகும் இப்பாட்டே வள்ளலாரின் வடிவம். இதுவே அவர் பெருமை. இதுவே அருட்பாவிளக்கமும் கூட. நான் கால்நூற்றாண்டுகளாக மௌனத்தவத்தில் இருந்து மகாதுரிய சமாதியில் ஊன்றினேன்: அதற்கு முன்பு வடலூருக்கு வந்திருந்தேன். இங்கே ஒரு குருக்கள் இருந்தார். அவரேவள்ளலாரின் கைப்பிரதிகளைக் காட்டினார். மற்றொரு பெரியவர், வள்ளலாரின் உறவினர் எனக்கு ஐயாவின் வாழ்க்கைக் குறிப்புகளைச் சொன்னார், என் ஆசிரியர் தெய்வசிகாமணிப் புலவர் அந்தக் காலம் இங்கே வந்து ஐயாவைநேரில் கண்டதுண்டு. அவர் அரிய பல விஷயங்களைச் சொல்லி அருட்பா ஓதச்சொன்னார். என் சிறுவயதில் கதிரைவேல்



பிள்ளை எங்கள் ஊருக்கு வந்து தெய்வ சிகாமணிப் புலவரிடம் தமது தமிழ் அகராதிக்குச் சாற்றுக்கவி கேட்டார். அந்த அகராதியில் அருட்சோதிஎன்ற பதம் இருக்கிறதா என்ற பதம் பார்த்தேன், இல்லை. வள்ளலார் என்பதும் இல்லை, எங்களுள் விவாதம் தொடங்கியது. புலவர் சண்டவேகத்தில் அருட்பா என்பது தேவார திருவாசகங்களே என்றார், நான் தாயுமானார் பட்டினத்தார், அருணகிரி நாதர், இராமலிங்கர் அனைவரும் இறைவன் அருள்பெற்றே பாடினர். அவையும் அருட்பாடல்களே என்றேன். சரிதான் உமது ராமலிங்கர்சாகாவுடல் பெற்றாராஎன்றார். ஆம்... என்றேன், எங்கே அவர் உடலைக்காட்டும் என்றார், நான் அருட்பாதொழூவூர் வேலாயுத முதலியார் பதிப்பைக்காட்டி இதுதான் நித்தியதேகம், உம் உடலும் என் உடலும் மற்றப் பஞ்சபூதசரீரமும் அழியும், அந்த அருட்பாதான் வள்ளலார் உயிர் உள்ளம் உருவம் எல்லாம்; கவிதை உடல், கருத்து உயிர், அருள் உள்ளம் இந்த அருட்பா உள்ளமட்டும் வள்ளலார் இருப்பார். இது பஞ்சபூதங்களாலும் கொலைக் கருவிகளாலும் எதனாலும் காலத்தாலும் அழியா நித்திய சுத்த சத்திய சன்மார்க்க சமரசவேதம்,வேதரிஷிகள் இன்றில்லை, வேதம் உள்ளது, அப்பர் இல்லை, அப்பர் தேவாரம் உள்ளது. அதுபோல் அருட்பாவாகவே வள்ளலார் இதோ இருக்கிறார், எங்கும் இருக்கிறார் என்றேன், தெய்வசிகாமணிஐயர் சரியான பேச்சு, வள்ளலார் இந்த ஊரில்பல வீடுகளில் உயிரோடுலாவுகிறார் என்றார், அப்படியானால் அவரை இலங்கைக்குக் கொண்டுபோகிறோம். அங்கும் இருக்கட்டும் என்றார் கதிரைவேலுடன் வந்த யாழ்ப்பாணி, அருட்பாவை எடுத்துச் சென்றார்.

வள்ளலார் இருக்கிறாரா? எங்கே? வருவாரா? மாட்டாரா என்றகேள்வியே தேவையில்லை, இதோ அருட்பா இதுதான் வள்ளலார், இதற்கு நாம் செய்யும் சேவையே வள்ளலார் பணி, ஏசுநாதர் பைபிள் வடிவாயிருக்கிறார்: முஹம்மது குரானாயிருக்கிறார், குருகோவிந்த சிங்கன் பத்தாவது சீக்கியகுரு- அவன் இறக்கும்போது சீடர்கள் "குருவே தங்களை இனி காண்போமா" என்றழுதனர். குரு "அன்பீர் எங்கே கிரந்தசாகெபைப் பத்து அன்பர்கள் சேர்ந்து படிக்கிறார்களோ, எங்கே திருநாமம் முழங்குமோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன் என்றான், கண்ணன்

எங்கே கீதை முழங்குமோ அங்கே நான் இருக்கிறேன் என்றான் அருட்பாவை ஓதுங்கள், அதன் வழிவாருங்கள்; அங்கே வள்ளலார் இருந்து உங்களை ஊக்குவார்,

அருள்விளக்கம்

அருட்பா படிப்பு வல்லபத்தாலோ மனித முயற்சியாலோ வந்தபாடலன்று உலகிலேயே இதைப்போன்ற அருள்வாக்கு இல்லை மகாதேவ மாலை; பிள்ளைச்சிறு விண்ணப்பம், பிள்ளைப்பெரு விண்ணப்பம், இங்கிதமாலை; அருள்விளக்கமாலை வருந்தருணப் பாடல்கள் இவையெல்லாம் சாதாரணப்புலவர் பாடும்பாட்டன்று, இவை திருவருள் வாக்கே. இந்தவாக்குடனேயே வள்ளலார் பிறந்தார். குழந்தை பருவத்தில் நடராசர் சந்நிதியில் அவருக்கு ஞான சம்பந்தம் ஏற்பட்டது,

தாய்முதலோ ரோடுசிறு பருவத்தில் தில்லைத்
தலத்திடையே திரை தூக்கத் தரிசித்த போது:
வேய்வகைமேற் காட்டாதே என்றனுக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்யுணர்வாம் -
- பொருளே.

இந்த ஞானசம்பந்தம்பாட்டருவியாகப் பொங்கியது, அண்ணன் சபாபதி. ஆசிரியர் சபாபதியிடம் தம்பியை அனுப்புகிறார். தம்பி தில்லைச்சபாபதியை ஆசிரியராகக்கருதி இயற்கையறிவால் பாமாலை புனைகிறார். நம்மை விஞ்சிவிட்டானே என்று பொறாமை கொண்ட ஆசிரியர் பாடம்சொல்வதை நிறுத்துகிறார். இராமலிங்கம் புத்தகப்படிப்பையும் நிறுத்தி வித்தகப்படிப்பில் தீவிரப்படுகிறான், அண்ணன் சினக்கிறான் படிக்காவிட்டால் சோறு கிடையாது என்று விரட்டுகிறான், அண்ணி மறைவாகச் சோறூட்டுகிறாள். ஒருநாள் "தம்பி, நீ ஒழுங்காகப் படித்தால் அண்ணன் மகிழ்வாரே. எங்களுடன் உண்ணலாமே; படியப்பா" என்று நயக்கிறாள். இராமலிங்கம் அண்ணி சொல்லைப் படிகிறான். படிக்கிறான்: எப்படி? சென்னை கந்தகோட்டத்தில் அமர்ந்து முருகனுக்குத் தமிழ்மாலை சூட்டி உபாசிக்கிறான், அதுதான் படிப்பு அவன் முருகனிடம் வேண்டியவரம் என்ன?

ஒருமையுடன் நினதுதிரு மலரடி ……………
சைவமணி சண்முகத் தெய்வமணியே,

என்றபாடலில் அவர்கேட்டவரங்களை அறிந்துகொள்ளலாம்,



# கடவுள் நினைவு
## ஒரு நந்தா விளக்கு.

(ராஜாஜி)

பொய்யும் புனைசுருட்டுமே பலன் தரும் என்று எண்ணி எண்ணி அதுவே வழக்கப்பட்டுப் போயிருக்கிறபடியால் தருமோபதேசங்களை, "இதுவெல்லாம் என்ன பிரயோசனம்" என்று தள்ளிவிடுவது உலகத்தார் வழக்கம், ஆயினும் உய்யும் வழி இதுவல்ல. தருமமே சுகம், தருமமே சந்தோஷம், தருமமே சாதுரியம், தருமமே செல்வம். தருமமே கெட்டால் நாடு செழிக்காது, எல்லோரும் தரித்திரநிலையடைவார்கள். மோசமும் பித்தலாட்டமும் சமுதாயத்தை நாசம் செய்துவிடும். சமுதாயம் கெட்டால் அனைவரும் கெடுவோம்,

சில வலைச்சிகள் சந்தைக்குப் போய் மீன்விற்றுவிட்டு ஊருக்குத் திரும்பினார்கள், அன்று சந்தையில் அதிகநேரம் இருக்க நேரிட்டபடியாலும் வழியில் மழை பிடித்துக்கொண்டபடியாலும் இருட்டுவதற்குமுன் ஊர் போய்ச்சேரமுடியவில்லை. வழியில் ஒரு கிராமத்தில் பூந்தோட்டக்காரன் ஒருவன் குடிசையண்டை நின்றார்கள், தோட்டக்காரன நல்லவன், "இரவு இங்கே தங்கி விடிந்ததும் போங்கள்" என்றான், வலைச்சிகள் "அப்படியே சரி" என்று தங்கினார்கள்.

இராத்திரி வலைச்சிகளுக்கு தூக்கமே பிடிக்கவில்லை, புரண்டு புரண்டு தூங்கப் பார்த்தார்கள்,

அவர்கள் இருந்த அறையில் தோட்டக்காரன் மல்லிகைப்பூவைப் பறித்து ஒரு கூடையில் வைத்திருந்தான், மறுநாள் காலை தன்னிடம் வாடிக்கையாகப் புஷ்பம் வாங்குபவர்கள் வீட்டுக்குக் கொண்டுபோவதற்காக வைத்திருந்தான். அந்த வாசனை வலைச்சிகளுக்குப் பிடிக்கவில்லை. தூங்கமுடியவில்லை: கொஞ்சநேரம் கழித்து அவர்களில் ஒருத்தி எழுந்து உட்கார்ந்து, "இந்தநாற்றம் திறக்கவே மாட்டேன் என்கிறது. வர வர அதிகமாகிறது. இதற்குஎன்ன செய்ய?" என்றாள்,

பிறகு கொஞ்சம் தண்ணீர் எடுத்துத் தங்கள் மீன் கூடைகளில்மேல் தெளித்து விட்டுக் கூடைகளை பக்கத்தில் வைத்துக்கொண்டு படுத்தார்கள். வலை நாற்றம் மிஞ்சி மல்லிகை வாசனையையடக்கிவிட்டது. வலைச்சிகள் குறட்டைவிட்டுத் தூங்கிப்போனார்கள்.

அவரவர்கள் வழக்கம் அவரவர்களுக்குச் சுவர்க்கம். நல்ல சகவாசமும் நல்ல பழக்க வழக்கங்களும் இல்லாமற்போனால் துன்மார்க்கமே மேன்மையாகத் தோன்றும். அதுதான் லௌகிக வாழ்க்கைக்கு வேண்டிய கெட்டிக்காரத்தனம் என்றும் தோன்றும்.

இந்தக் கலியுகத்தில் நாம் செய்யவேண்டிய தவம் ஒன்றே; உண்மை பேசுவது. அதைக்கூடச் செய்ய "மாட்டோம்" என்கிறோம். வியாபாரம் செய்பவர்கள், கச்சேரியில் வேலையில் இருப்பவர்கள் அனைவரும் உண்மைபேசவேண்டும். சத்தியமே கெட்டிக்காரத்தனம். அதுவே கடவுளை அடையும் வழியும் லௌகிக சாதுரியமும் ஆகும்.

வீட்டில் பண்டிகை நாட்களில் நந்தாவிளக்கு ஏற்றுகிறோம். அது எரிந்துகொண்டே இருக்கவேண்டும்; அணைந்துவிட்டால் குடும்பத்துக்குஏதாவது கஷ்டம் நேரிடும். அப்படியே கடவுள் நினைவும் ஒரு நந்தா விளக்கு. இதய கமலத்தில் ஏற்றிவைத்த அந்தவிளக்கு அணைந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்த லௌகிக காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவ்வப்போது அந்தவிளக்கில் எண்ணெய் ஊற்றியும் திரியைத் தூண்டிக்கொண்டும் இருக்கவேண்டும். அதனால் எந்த வேலையும் தடைப்படாது, வெற்றி ஏற்படும்.

[ராமகிருஷ்ண உபநிஷதம்]

## பொறுக்குமணிகள்.

மலையூற்றிற் பொங்கியெழுந்த தண்ணீர் இயல்பாகக் கீழிறங்கி ஒருவழிபற்றி ஆறாகப்பரிணமித்துப் பயிர்களையும் உயிர்களையும் வளர்த்து, உடம்புதோறும் உயிரெனத் திரிகிறது, அதுபோலவே, இறைவனது சக்திவெள்ளம் இயற்கையுருவாகப் பரிணமித்தது.



# கடவுளருளைப் பெற்றால் கவலைக்கிடமில்லை.

[பிரம்மானந்த சுவாமிகள் உபதேசம்]

கடவுளின் கிருபைக்கு எப்பொழுதும் பஞ்சமென்பது இல்லை. பின் இடையூறுதான் யாது என்றால் மாந்தர் அதனை பயன்படுத்திக்கொள்ள முயலுவதில்லை என்பதே. சோம்பலான வீண் பேச்சிலேயே அவர்கள் சந்தோஷப்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலான உண்மைப்பொருளை உணர ஒருவருக்கும் விருப்பமில்லை. மனிதன் அறிவற்ற பேச்சிலேயே. அதாவது, தனது வாழ்நாளை எவ்வாறு கழிக்கிறான் என்பதைப்பற்றிப் பேசுவதிலேயே அவன் இறுமாப்புக் கொள்ளுகிறான்: அவன் எதை விதைக்கிறானோ அதையே அறுக்கிறான். "ஆயிரக்கணக்கான ஆசார்யர்கள் கிடைப்பார்கள்' ஆனால் உண்மையான சிஷ்யன் ஒருவன்கிடைப்பது அருமை: ஆசாரியர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்பவர் அநேகர் இருக்கின்றனர்; ஆனால் அவர்களுடைய உபதேசங்களை கேட்போரும் அவற்றின்படி நடப்போரும் எங்கேயுள்ளர்? குருவாக்கியத்தில் உறுதியான நம்பிக்கைகொண்டு உயரிய வாழ்க்கைக்காக ஒருவன் உழைத்துக் கொண்டே போவானாயின், அப்பொழுது அவனுடைய துன்பங்களுகெல்லாம்முடிவு ஏற்பட்டு விடுகின்றது. அப்படிப்பட்ட நம்பிக்கைஎவனிடம் இருக்கிறதோ அவன் சஞ்சலப்பட்ட மனத்துடன் அங்குமிங்கும் ஓடி யஅலையவேண்டியதில்லை. அவனுடைய தேவைகளையெல்லாம் இறைவனே கவனித்துக்கொள்கிறான். ஈசுவரனே அவனுடைய கையைப்பிடித்துச் சரியான மார்க்கத்திலே அவனை அழைத்துச்செல்கிறான், கடவுளருளைப்பெற்றவனுக்கு கவலை எதுவும் வேண்டியதில்லை.

லக்ஷத்தில் ஒருவன்தான் தெய்வ சிந்தனையையும் உத்தமமான ஆசைகளையும் மனத்திற்கொள்ளக் கொடுத்துவைத்திருக்கிறான். அத்தகைய பாக்கியம் பெற்ற ஜீவர்களிலும் வெகு சிலரே கடைசிவரையில் தங்களுடைய இலக்ஷியங்களில் நிலைபெற்றிருக்கக் கூடும். யாருடைய உள்ளத்திலே நல்ல எண்ணங்கள் ஏற்கெனவே உண்டாயிருக்கின்றவோ அவர்கள் தங்களாற் கூடிய வரையிலே அவற்றைப் பலப்படும்படியும் நிலைபெறும் படியும்

செய்துகொள்வேண்டும். தங்கள்பால் உள்ள ஆர்வமானது குறை
ந்து போகாவண்ணம் நிலைபெறச் செய்தற்பொருட்டு இறைவனை
அவர்கள் இடையீடின்றி; "ஆண்டவனே, அடியேனுக்கு உமது
கிருபையை என்பால் நிலைத்திருக்கும்படி அருளுக." என்று பிரார்
திக்கவேண்டும். "ஒருவீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரி ஒருத்தி
தனது எஜமானுடைய பொருள்களனைத்தையும் தன்பொருளைப்
போலவே பார்த்து பராமரிப்பது போன்று காணப்படுகிறாள்.
ஆனால் அவளது உள்ளத்தினுள்ளே அப் பொருள்கள் யாவும்
தன்னுடையன அல்ல என்பதை அறிவாள்," என்று ஸ்ரீராமகிரு
ஷ்ணர் சொல்வது வழக்கம். அவ்வாறே, நாம் இவ்வுலகத்தில்
வாழுமளவும் பற்றில்லாது கருமங்களைச் செய்து வர வேண்டும்.
நமது உள்ளத்தினுள்ளே, இந்த உலகமானது சாசுவதமானவீட
ன்று, இது தாற்காலிகமாக ஏற்பட்ட வீடுதான் என்று அறிதல்
வேண்டும். நாம் எங்கிருந்து வந்தோமோ அந்தப்பரமபத வீடா
கிய கடவுளினிடத்தே நம் மனத்தைச் செலுத்த வேண்டும்.

மெய்ப்பொருளைப் பற்றியோ ஈசுவரனைப் பற்றியோ கவலை
கொள்பவர் எத்தனைபேர்? கர்வம்தலைக்கேறி, அதனால் மனிதன்
கடவுள் ஒருவன் உளன் என்பதையே மறுத்துப் பேசுவதான அவ்
வளவு உயர்ந்த ஸ்தானத்தில் சிலவேளைகளில் ஏறிவிடுகிறான். ஒவ்
வொருவனும் தன்னுடைய வாக்கே பிழைபடாத வேத வாக்கெ
ன்றும் தன்னுடைய வழியே கடைத்தேறும் வழியென்றும் நினை
க்கின்றான்: அப்படிப்பட்ட ஒருவன் என்னசொல்லுகிறான் என்ன
சொல்லுகிறான், என்பது உங்களுக்குத் தெரியுமா? "எங்கள்
அழிவுக்கு உட்படாத ஒன்றை நாங்கள் ஒப்புக் கொள்வதில்லை,"
என்று அவன் கூறுகிறான். அவனுடைய அறிவு எவ்வளவு சிறு
மையுடையது என்பதை அவன் நினைப்பதில்லை! இன்றைக்கு
எதைச் சரியென்று நினைக்கின்றானோ அதையே நாளையதினம்
தப்பென்று விட்டுவிடுகிறான்; இவ்வாறாக அவனுடைய கொள்
கையானது நாளுக்கு நாள் மாறுகிறது. தன்னுடைய அறிவையே
விளம்பரப்படுத்தும் வகையால். எதுஉயர்ந்ததும் மேலானதுமா
னபொருளோ அதனை அவன் சிறிதும் சட்டை செய்யாதவனாயி
ருக்கிறான். இவ்விதமாக எத்தனை வழிகளாலே மனிதனானவன்
மாயைக்கு உட்படுகிறான் என்பதை இறைவியாகிய அப்பராசக்
தியே அறிவாள்



99-ம், 100-ம் பக்க "கடவுளருளைப்பெற்றால்" என்ற கட்டுரை
யின் தொடர்ச்சி.

ஒவ்வொரு மனிதனும் தன் புல்லறிவுக்குத் தக்கபடியே கட
வுள் இப்படிப்பட்டவர் என்று எண்ணிக்கொள்கிறான். ஆனால்
கடவுளைப்பற்றிய நம் கருத்தோ அம்மாதிரி வரம்புக்கடங்கிய
தாய் இருத்தல் கூடாது: ஏனென்றால், கடவுள் தம்முள்ளே எல்
லாம் அடங்கப்பெற்றவராய் இருக்கின்றார். மனத்தாலும் புத்தி
யாலும் அவர் அறியப்படாதவர். எவனொருவனுக்கு இறைவன்
தாமே தமது இரகசியங்களையெல்லாம் காட்டியருளுகின்றாரோ
அவன் மாத்திரமே கடவுளுடைய இயல்பை அறியமுடியும்.
கடவுளை அறியும்போது ஞானவாயில்கள் எல்லாம் திறக்கப்
படுகின்றன; ஹிருதயக்கிரந்திகள் [உள்ளத்தின் முடிச்சுகள் அல்
லது கட்டுகள்] அறுத்தெறியப்படுகின்றன; வரம்பில்லாத ஞானம்
அடையப்படுகின்றது. இந்த நிலையை மனிதன் அடையும்போது
தான், அவன் தனக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை, அதா
வது கடவுள் அவனுக்குச் சொந்தமானவர், அவன் கடவுளுக்குச்
சொந்தமானவன் என்பதை முற்றிலும் அறிந்து கொள்கிறான்.

## பொறுக்கு மணிகள்.

இயற்கையுலகம் ஒரு மின்பொறி, இறைவனருள் மின்சாரம்
அப்பொறி எத்தனைகோடி வியன்களைச் செய்தாலும்எல்லாம்அந்த
மின்வன்மையா லல்லவோ?

❁ ❁ ❁

ஏதாவது சிறு காரியம் நிறைவேற்றினாலும் தற்பெருமை
பேசுகிறான் மனிதன், இயற்கையன்னை கோடிக்கணக்கான அற்
புதங்களை ஓசைப்படாமல்; தம்பட்டமில்லாமல் ஆரவாரமில்லாமற்
செய்கிறாள்.

❁ ❁ ❁

உயிர்களையும் பயிர்களையும் வளர்த்துக் கடலிற்கலந்து கட
லாகும் ஆற்றைப்போல உள்ளமட்டும் அன்புகொண்டுஉலகிற்கு
இயன்ற தொண்டுசெய்து இரண்டறக் கலக்க வேண்டும் மனித
வாழ்வு!

# பரமஹம்சர் திருவாய் மொழிகள்.

கடவுள் உருவமற்றவரும் உருவமுள்ளவருமாவார். உருவம் அருவம் இவ்விரண்டையும் கடந்தவருமாகிறார், அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவரேதான் முற்றிலும் அறிவார்.

❁ ❁ ❁

சிவம், சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்கு அத்தியாவசியமானவை; உலர்ந்துபோன களிமண்ணை வைத்துக் கொண்டு எந்தக் குயவனாலும் சட்டிபண்ண முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும், அதுபோல, சக்தியினுடைய உதவியில்லாமல் சிவனால் மட்டும் சிருஷ்டித்தொழில் நடைபெறாது.

❁ ❁ ❁

நெருப்பில் போடப்பட்ட ஈரவிறகும் சீக்கிரத்தில் உலர்ந்து எரியத்தொடங்குகிறது. அதுபோல சாது சங்கமானது உலகப் பற்றுள்ள ஜனங்களின் மனதிலுள்ள கர்வமும் ஆசையுமாகிய ஈரப்பசையை வற்றச்செய்கிறது. அப்பால் அவர்களிடம் விவேகமாகிய நெருப்பு நன்றாக எரியும்.

❁ ❁ ❁

திசையறி கருவியின் நுனி எப்போதும் வடதிசையையே காட்டும், வரையில் கப்பலானது தனது மார்க்கத்தை விட்டுவிலகிப் போய் ஆபத்துக்குள்ளாவதில்லை. வாழ்க்கையாகியகப்பலின் திசையறி கருவியாகிய மனிதனுடைய மனமானது பரப்பிரம்மத்தையே எப்போதும் நோக்கி அசைவற்றிருக்குமாகில், அஃது ஒவ்வொரு ஆபத்தையும் தாண்டிப்போகும்.

❁ ❁ ❁

ஸ்ரீராமபிரான் இலங்கை போய்ச்சேருவதற்குச் சமுத்திரத்தில் அணை போடவேண்டியிருந்தது. ஆனால் அவருடைய பரம பக்தனான ஹனுமான் ஸ்ரீராமபிரானிடம் வைத்திருந்த திடபக்தியினால் சமுத்திரத்தை ஒரே தாண்டாய் தாண்டிவிட்டான். இங்கு எஜமானனைக் காட்டிலும் சேவகனே அதிகமான காரியத்தை சாதித்துவிட்டான் காரணம் விசுவாஸமே.



# கல்வித்திட்டம்.

[தென்னாபிரிக்கா டர்பன் திரு ச. மு பிள்ளை அவர்கள்]

ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தனிப்பட்ட குணாம்சங்கள் உண்டு, அப்படியே பாரதசமுதாயத்திற்கென்று தனியான குணாம்சங்கள் உண்டு. பாரதபூமியின் சாரத்திற்கேற்ப பாரதநாட்டு மக்களுக்குத் தனியான மேதையும் உண்டு, அந்தமேதையை வளர்க்கவேண்டும். அந்தமேதை செழிக்கக்கூடிய வகையில் நம்முடைய கல்வித்திட்டத்தை சீர்திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும், அதுதான் தேசிய ரீதியில் கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லப்படுவதன் கருத்து இப்படிப்பட்ட கருத்துக்கு கூடும் வகையில் திட்டத்தைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டியது நம் கடமையாகும். இந்தக்கடமை நம் நாட்டிற்கும், நாட்டுமக்களுக்கும் செய்ய வேண்டிய கடமைமாத்திரமல்ல, உலகத்தினர்க்கு ஆற்றவேண்டிய கடமையாகும்,

நம்முடைய அறிஞர்கள் நம் நாட்டு மக்களுக்கு கல்வித்திட்டத்தை வகுக்கையில் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பண்டைக்காலத்து குருகுலவாச கல்வித்திட்டத்தை அவர்கள் மறந்துவிடக்கூடாது. குருகுலவாச கல்வித்திட்டத்தின் பலனாக நம் நாட்டின் மேதாவிகள், அறிஞர்கள்; தபஸ்விகள் ஞானிகள், சகலகலா வல்லவர்கள், பௌதிக ரசாயன சாஸ்திர நிபுணர்கள், வானசாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் இம்மாதிரிப்பல துறைகளில் உன்னத நிலை எய்திய மகா புருஷர்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தத்துறையிலும் நம் முன்னோர்கள் இளைத்தவர்களல்ல, வேதாந்த ஞானத்தில் நம் முன்னோர்களுக்கு நிகரானவர்கள் இன்னும் இவ்வுலகில். எங்கும் பிறந்திருப்பதாக காணவுமில்லை; கேள்விப்படவுமில்லை; அப்படிப்பட்ட கல்வித்திட்டத்தை நம்முடைய லட்சியமாக நம்மனக்கண்முன் வைத்துக்கொண்டே, அதை அனுசரித்துப் புதிய திட்டத்தை வகுக்க வேண்டும்,

அன்னியர் நமக்கு அளித்திருக்கும் கல்வித்திட்டமானது; இப்பொழுது அமலில் இருந்துவரும் கல்வித்திட்டமானது சன்மார்க்க ஈனமானது; ஆன்மீக மற்றது; அனுசாரம் வாய்ந்தது

நல்லொழுக்கத்தை வளர்க்க வேண்டியலட்சியமேஇல்லாத திட்டமென்று பலர் புகன்றிருக்கிறார்கள்.

எனவே மனிதனை தெய்வமாக்குவதேகல்வியின்லட்சியமாக இருக்கவேண்டும். ஆனால் அன்னியர் நமக்கு அளித்துவந்த கல்வித்திட்டமானது, அவர்களுடைய ஆட்சி ஒழுங்காக நடத்தும் பொருட்டு சிறந்த உத்தியோகஸ்தர்களை உற்பத்தி செய்யும் திட்டமாக இருந்தது. அந்த கல்வித் திட்டத்தில் தேறினவர்கள் குமாஸ்தா வேலைக்கு லாயக்கானவர்களாக இருந்தார்களேயன்றி, சமுதாயத் தலைவர்களாக ஆகவில்லை. அந்தத் திட்டம் சன்மார்க்க ஆசாரியர்களை சிருஷ்டிக்கவில்லை. மக்களை சுதந்திர புருஷர்களாகச் செய்யவில்லை.

ஆனால் நீங்கள் கேட்கலாம்! நம் நாட்டில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்திஜீ போன்ற மகான்கள் இருந்தார்களே; அன்னியர் அளித்த கல்வி திட்டத்தின் பழங்களல்லவா அவர்கள் என்று. அப்படி ஒன்றுமில்லை. இந்த கல்வி திட்டமென்னும் கற்பாறையைக் கழுத்தில் கட்டிக்கொண்டிருப்பினும் அதையும் தூக்கிக்கொண்டு தண்ணீர் மட்டத்திற்குமேல் மிகுந்த மகான்கள் அவர்கள்! பாரத மண்ணில் பிறந்த மகிமையினால், அன்னை பாரதி பராசக்தியின் அருளால், அவர்கள் மெய்ஞ்ஞானிகளாகி விட்டார்கள், ஆகவே நாம் அசட்டுப்பிசட்டென்று எண்ணங்களை மனதிற்கொண்டு, குருட்டுத்தனமாக லட்சியக்குறியில் நெறியில்லாமல் கல்வி திட்டத்தை வகுத்துவிடக்கூடாது.

கல்வியின் லட்சியங்களென்ன என்பதை முதலில் வரிசைக்கிரமமாக எழுதிக்கொண்டு, அந்த லட்சியங்கள் பூர்த்தியாவதற்கு ஏற்றமுறையில் புதிய கல்வித்திட்டத்தை வகுக்கவேண்டும். நாம் அடிமைப்பட்டிருந்த காலத்திலும்பாரதஜாதி உயர்ந்தஜாதி, பாரத சமுதாயம் உலகமக்களுக்கு ஆசாரிய ஸ்தானத்திலிருந்து உபதேசம் செய்து, நல்வழியில் அழைத்துச் செல்லப் போகிறது என்றெல்லாம் கற்பனை உலகில் உலவினோம். நாம் ஈன தசையிலிருந்தபோதும் "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்று வாழ்ந்தோம். சுதந்தரம் கிட்டியபிறகு நாம் அந்த உயர்ந்தநோக்கங்களை மறப்பது மடத்தனமாகும்.



இந்திய அரசாங்கமானது மத வைராக்கியங்கள் சம்பந்தமற்றது என்று சொல்லுகிறார்கள். அது மிகவும் சரியான வார்த்தையும், அபிப்பிராயமுமாகும். ஆனால் அரசாங்கமென்றால் கடவுள் இல்லை, மதம் இல்லையென்னும் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்ட அரசாங்கமென்ற அர்த்த மல்ல. தனிப்பட்ட எந்த மதத்திற்கும் விசேஷ ஆதரவைக் கொடுக்காது, மதத்திற்கு மதம் பட்ச பாதம் காட்டாது, ஆனால் சகல மதங்களையும் சமநோக்குடன் கருதும் என்பதுதான் அர்த்தம்.

இந்தியநாட்டு ஒவ்வொரு மனிதனும், அவனவன் மதத்தில் பக்திவைத்து சன்மார்க்கத்தில் வளரவேண்டும். சில புருஷனாக வேண்டும்; நாட்டிற்குப் பணியாற்றவேண்டும்; உலக மக்களுக்கு வழிகாட்டவேண்டும், இதுதான் சர்க்கார் கொள்கை. ஆகவே நாம் புதிய கல்வித் திட்டத்தை வகுக்கும் போது மத பக்தி; தெய்வபக்தி; ஆசார வளர்ச்சி ஒழுக்கம் ஓங்குதல் இவைகளுக்கு அனுசரணையாக திட்டத்தைச் சமைக்கவேண்டும்; பாரதசமுதாயத்தின் ஒழுக்கத்தை வளர்ப்பதே கல்வியின் லட்சியமென்பதை மறந்துவிடக்கூடாது, சமுதாய ஒழுக்கமில்லா நாடு முன்னேறாது.

நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அறிவில் ஆதவனுக்கு சமானமாகவும், புஜபலத்தில் பீமனைப் போலவும்; மனோதிடத்தில் மஹரிஷிகளைப் போலவும்; நல்லொழுக்கத்தில் தருமரைப் போலவும்; ஆன்மீகத்தில் பரதனைப் போலவும் ஆகவேண்டும். இதுவே நம்முடைய புதிய கல்வித்திட்டத்தின் லட்சியமாக இருக்கவேண்டும்.

ஆசாரிய சுவாமிகள் ஸ்ரீசங்கரபகவான் காசிக்குச் சென்றார். சரஸ்வதி ஆலயத்தில் சர்வஞான பீடத்தில் அமரப்போனார். அசரீரிவாக்கால் "குணத்தில்; சீலத்தில்; ஒழுக்கத்தில்; உயர்ந்தவனா சொல்!" என்றுகேள்வி பிறந்தது. கல்வி கேள்வி சாமர்த்தியத்தில் நிறைந்திருந்தால் போதாது. குணசம்பூர்ணமும் இன்றியமையாதது என்பதுதான் அந்த அசரீரி வாக்கின் அர்த்தம், நம்முடைய கல்வித்திட்டம் மேற்சொன்ன உயர்ந்த லட்சியத்தை குறியாகக்கொள்ளவேண்டும்.

# மனத்தால் துதிப்போம்

நாம் தினசரி எத்தனையோ காரியங்களை மறக்காமல் செய்து வருகிறோம். அதுபோல் ஆண்டவனை வழிபாடு செய்துவருகிறோமா என்றால், கொஞ்சம் சந்தேகத்துடன்தான் பதில் கிடைக்கும், ஒருநண்பர்என்னிடம் பின்வருமாறு சொன்னார், "ஐயா! நாம் உபயோகமற்ற பலபண்டங்களுக்காக மணிக்கணக்கில் கடைகளிலே 'க்யூ' வரிசையில் நின்று நம் நேரத்தைச் செலவிட்டிருக்கிறோம். அந்த நேரத்தை ஆண்டவனை வழிபடச் செலவிட்டிருக்கிறோமா?"

ஆ! எத்தனை உண்மை! கேவலம் நம் உடல் நலத்திற்காகச் செலவிடப்படும் நமது அருமையான நேரங்களில் ஓர் சிற பகுதி ஆண்டவனை வழிபடுவதிலே செலவிட்டால், அதன் பலன்தான் எப்பேர்ப்பட்டது?

சரி' ஆண்டவனை வழிபட ஏதாவது பணம்காசு தேவையா? கேவலம் மனிதனையல்லவா நாம் பணம், காசு, பொருள்கொடுத்து திருப்தியடையச் செய்ய வேண்டியிருக்கிறது. [எத்தனைதான் கொடுத்தாலும் திருப்திபடையாதவரைப்பற்றி இங்குகுறிப்பிடத் தேவையில்லை] ஆனால் ஆண்டவனை வழிபட ஒரு பொருளும் தேவையில்லை. நம்மனத்தைமட்டும் அவன்பால்ஈடுபடுத்தி வழிபட்டால் போதும்! ஓர் பக்திமான் சொன்னார். "மனிதனைத் திருப்திசெய்ய மனதைத்தவிர மற்றைப்பொருள்களும் தேவை, ஆண்டவனைத் திருப்தி செய்ய மனம்மட்டும்தான் தேவை."

சிலர் பக்திமான்களைப்போல நடிப்பதுமுண்டு, பலபொருள்களைச்செலவிட்டுபெயருக்கும் புகழுக்காகவும்பக்திமார்க்கத்தில் ஈடுபடுவது உண்டு. மனத்தை உள்ளன்புடன் அன்பால் ஈடுபத்தி வழிபடாத, பக்தர்கள் செய்யும் நற்காரியங்கள் பலனற்றுப்போகின்றன. பகட்டுக்கும் படாடோபத்திற்கும் உட்பட்டவன் ஆண்டவனா? அதைக்காட்டிலும் தம்மனதை மட்டும் தன்பால் செலுத்தி பக்திசெய்யும் மெய்யடியார்களைத்தான் ஆண்டவன் அனுக்கிரகிக்கிறான்.



# சுத்த சமரஸ சன்மார்க்கம்.

[யோகி]

## 4 ஐய வினாக்கள்.

சமயப் பிரிவினால் வந்த கொடிய போர்களும் சிந்தியஇரத்தமும் பார்த்தால், இந்தச் சமயங்கள் எதற்கு? கடவுளின் பெயரால் மாந்தர் ஏசி இப்படிக் காலத்தைச் சூதாடித் திரிகிறார்கள்? இந்தச் சமயங்களையெல்லாம் கடவுள் ஏற்படுத்தினாரா? இவையெல்லாம் மனிதன் செய்துகொண்ட வேறுபாடுகள் தாமே? எல்லாருக்கும் பொதுவான கடவுள், தன்னை அந்த மதம் இந்த மதம் என்று சொல்லிக்கொண்டதுண்டா? சங்கரசாஸ்திரி அன்பு செய்தாலும் திருக்குலச்சாம்பன் அன்புசெய்தாலும் அந்தோனிசூசை அன்புசெய்தாலும், இஸ்மல்கான் அன்பு செய்தாலும் அடைவது

---

106-ம்பக்கத்தொடர்ச்சி

பெரிய புராணவாயிலாக நாமிதற்குப் பல உதாரணங்களைப் பெறுகிறோம். ஆண்டவனை பக்திசெய்யத் தூண்டி ஊக்குவிக்கும் உத்தம கிரந்தங்களில் சேக்கிழாரின் பெரியபுராணம் முக்கியமானது என்பது சமீபத்தில் எனக்குத் தெரியவந்தது. பலர் இராமாயணம் பாரதம், பாகவதம் முதலிய புராண இதிகாசங்களைப் பிரசங்கம் செய்யக் கேட்டிருக்கிறோம். ஆனால் பெரிய புராணம் என்ற தலைப்பில் தொடர்ச்சியாய் உபந்நியாசம் செய்த பக்தப்பிரசங்கங்கள் குறைவு என்பது என் அபிப்பிராயம். மேற்படி பக்திப் பிரசங்கத்தை சமீபத்தில் இனிய தமிழில் வழங்கின பெரியார் திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ சுகப்பிரம்ம இராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள், அவர்கள் வயதில் சிறியவராயினும்அறிவாற்றலில்பெரியவராய் இருக்கிறார்கள்: உண்மைப்பக்தியைப்பற்றி அவர்கள் எவ்வளவு உருக்கமாய் விரித்துச் சொல்கிறார்கள். இம்மாதிரி அங்கங்கே சில சுகப்பிரம்மங்கள் தோன்றி மக்களைப் பக்திமார்க்கத்தில் ஈடுபடச் செய்தால், நாஸ்திகம் நம்மை விட்டு ஓடிப்போய் விடும் என்பதில் ஐயமில்லை.

ஒரே கடவுளைத்தானே. இதையறியாமல் இவர்கள் ஏன் நான்கு சமயங்களாகப் பிரிந்து போராடுகிறார்கள்? என்று அறிவாளர் கேட்கின்றனர். பரமபிதா ஒருவர்; திருக்குமாரர் ஒருவரே; வைபிளும் ஒன்றே, மலையுபதேசமும் அன்புமயமே. ஆனால் மத்திமகால ஐரோப்பாவை நினைத்தால்கிறிஸ்து சீடர் ஒருவரை ஒருவர் தீயிலிட்டுக் கொன்ற காட்சிகளும் மதச்சண்டை அரசியற் போராக வளர்ந்து சிந்திய இரத்த வெள்ளமும் நமது கண்முன் நிற்கின்றன. ஆ கொடுமை! ஒரே நாராயணன் பெயரைச்சொல்லிக்கொண்டு வடகலை தென்கலையென்று ஒருவர்மேல் ஒருவர் கல்லெறியும் காட்சியைக் கண்டால் .... ஆ! இச்சிறு வேற்றுமையால் விளைந்த கலகம் பிரீவிகௌன்ஸில் மட்டும் போய் நமது கோயில் பணத்தைகொள்ளைகொடுப்பதைக் கண்டால் இன்னும் அதிகமாக மனம் புண்படுகிறது. சிவனையும் அறியார் விஷ்ணுவையும் அறியார், சிவன் பெரியவனா விஷ்ணு பெரியவனா, என்று நாளெல்லாம் வாதாடுவர். காலத்தைச் சூதாடுவர், இந்தசமயக் கூத்துக்களையெல்லாம் பார்க்கும்போது, கடவுள் உண்டா? உண்டானால் ஒருவனா, பலவனா, ஒருவனானால் பலமதங்களேன்? இம்மதங்கள் இல்லாவிட்டால், கடவுளே இல்லாவிட்டால்தான் என்ன குடிமுழுகிப்போனது....உண்ண முடியாதா உடுக்கமுடியாதா ... பெற்றுவளர்த்து மரபைப் பெருக்கமுடியாதா? ... என்றெல்லாம் இக்காலம் கேட்கின்றனர்.

## 5 சமயம்.

கடவுள் எந்தச் சமயத்தையும் படைக்கவில்லை, "வாதமிடும் சமயநெறிக்கு அரியவன். சாதி மதாதீதன். சர்வபூத மஹேசன்; உயிர்மேவியான், என்று கடவுளை நமது புண்ணிய நூல்கள் போற்றுகின்றன. "பெயர் வடிவப் பேதமற்ற நிர்க்குணம் பந்தசொந்தமற்ற சுதந்திரம் நித்தியம், நிரஞ்சனம் சுத்தம்" என்று புண்ணியர் கடவுட் பேறெய்தலாம் என்று அனுபவத்தால் உரைக்கின்றனர். மனிதன் தனது தெய்வத் தன்மையை மறந்து மதிமயங்கி மலவழுக்குற்று இடர்ப்படுகின்றான் மனத்தழுக்கை நீக்கி, மதியைக்கழுவித்து மீண்டும் மனிதனை அவனுக்குரிய தெய்வ நிலையிற் சேர்ப்பதே சமயமாகும்: ஆன்மாவை மாசறுத்துக் கடவுளுடன் இரண்டறச் சேர்த்துச் சமத்துவப் படுத்துவதே சமயமாகும்.



# சிலம்புச்செல்வமும் - சுத்தானந்தமும்.

[தே-போ மீனாக்ஷிசுந்தரன்]

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றொரு மணி ஆரம் படைத்த தமிழ்நாடு" எனத் தமிழ்க்களிப்பால்ஆடுகிறார் சுப்பிரமணியபாரதியார், ஆனால் சிலப்பதிகாரமோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கிய பழந்தமிழில் உள்ளது. அதனை எல்லோரும் எளிதில் அறியலாவதில்லை- அதுபற்றி அதனைப்

---

108-ம்பக்கத் தொடர்ச்சி

பல ஆறுகள் கடலிற்புகுந்து அதனுடன் சமமாகின்றன. அதேபோல இறைவனருட் கடலிற்புக்கு ஆன்மாக்கள் சமநிலை பெறுகின்றன. அச்சமநிலையை அளிப்பதே சமயமாகும். சமயம் உலக வாழ்விலும் பேதத்தை ஒளித்துச் சமத்துவ மளிப்பதாகும். மாந்தரை வேறுபாடு செய்வது எச்சமயக் கொள்கைக்கும் ஆகாது. "நீங்கள் பிரிவினையால் சண்டை போட்டு மண்டையுடையுங்கள்." என்று எந்த சமயாச்சாரியும் எந்தப்புண்ணியநூலும் ஓதுவதில்லை, மாந்தர் உள்ளத்தில் இன்பப்பொருள் உள்ளது. மனம் புறத்தே புலன்களைப் பற்றியலைவதால் அந்தப் பேரின்பப்பொருள் மனிதருக்கு அனுபவமாகாமல் இருக்கிறது. அந்த இன்பத்தை அறியாமல் மனிதர் புற வேறுபாடுகளைப் பற்றி "இது அது, நான், நீ, எனது உனது;" என்று சண்டையிடுகின்றார்கள்: இதயம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அங்கே இன்பப் பொருள் திருக்குலத்தாருக்கு மற்றொன்று என்பதில்லை. "இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனாகிலும் உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ ...என்று நீ அன்று நான்" என்றார் நமது தமிழ்வேத முனிவர். அந்தப்பொருளைச்சிவன்; விஷ்ணு, அல்லா, பரமபிதா, யஹோவா என்று எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுங்கள். சர்க்கரையை ஷுகர் என்றாலும் ஷக்கர் என்றாலும் ஸுகர் என்றாலும் ஒன்றுதான், இனிப்புமாறாது. கரும்பைச் 'செருகு' என்று தெலுங்கன் சொன்னால் கசக்குமா? ஆதலால் இன்பமாகிய பொருள் ஒன்றுண்டு. அதை அடையவழிகாட்டுவதே சமயம்; அதற்கு வழிகாட்டாதது சமயமாகாது.

பழிதூற்றும் பெருமக்களும் இருக்கின்றனர். இந்நிலையில் அந்நூலை இப்போதைய உரைநடையில்எழுதி உலகிற்குதவிய சுவாமி சுத்தானந்த பாரதியார் தமிழுக்குப் பெரியதொரு திருத்தொண்டு புரிந்துள்ளார், தமிழர் அவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையவராவர்.

கண்ணகியின் தமிழினும்இனியசாயல்-சீரையுனும் சிறந்த கற்புப்பொலிவு-தன்கணவன் கள்வன் எனப்பிறந்த பழி கேட்டதும் கொதித்தெழுந்த மறத்தீ - இம்மாறுதல்கள் மிக அழகாக இளங்கோவடிகள் புனைந்துரைத்துள்ளார். கோவலன், எறிபத்தர் போலத் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளனாய்வாழ்ந்தபெருமை -இன்பத்தோடியைந்த வாழ்வு-இவையும்-சிறந்ததோர் ஓவியநிலையில் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளன. பரத்தையர் குடியிற் பிறந்தும் கற்பிற்சிறந்த மாதவியின் வரலாறுபோலப் பிறிதொருவரலாறு உலகிற்காண்பதரிது. ஆடல் இன்பம்-பாடல் இன்பம் -பெண்ணினும் அமைதியின்பம்-பூவும் - காயும் அகிலும்-துகிலும் அணியும்-பணியும் இன்பத்திற்கோர் இன்பமாய்ப் பழுத்த இன்பம் -இவ்வாறு இன்பவடிவமாய் விளங்குகிறாள் மாதவி. தமிழரைக் குறைகூறியரைப் பொறாது கொதித்தெழுந்த செங்குட்டுவன் வீரம் இமையமலைக்கும் மேலாக ஓங்கிவளர்ந்தது. ஆராயாது செய்த தவற்றால் கோணிய செங்கோலை உயிர் கொடுத்துத் தூக்கி நிறுத்திய பாண்டியன் நெடுஞ்செழியன் என்றென்றைக்கும் அரசர்க்கு உயிர்நெறியாம் அறநெறி பிறழ்ந்தான்என்றறிந்ததும் உயிர்நீத்த அவனுடைய மனைவியாம் பாண்டிமா தேவியின் ஆறிய கற்பிற்கெதிர் கண்ணகியின் சீரிய கற்பன்றி வேறெதனை நாம் எண்ணக்கூடும்? இவ்வாறு பல்வேறு அழகோடு விளங்கும் இன்னிசைக் கூத்தியல் நூல்வேறு ஒன்று இல்லை எனலாம். முத்தமிழ் வடிவாம் இந்நூலைப் படியாதார் தமிழர் ஆவரோ?

இத்தகைய சிறந்த நூலை உரைநடையில் அமைத்து சுவாமி சுத்தானந்தபாரதியார் எழுதியுள்ள தமிழ் நூல்மாலையே அவர் அல்லும் பகலும் செய்துவரும் தமிழ்த்தொண்டின் பெருமையைப் பரக்கப்பேசும். அவர் வாழ்க! தமிழ் வாழ்க!





## காந்தியப்பணி செய்வோம்.

[ச. ஆறுமுகநாதன்]

அண்ணல் காந்தி அமரர்க்கு
அன்பர்கள் கூடி ஒற்றுமையாய்
வண்ண மலர்கள் சமர்ப்பித்து
வணக்கம் செய்து உலகத்தில்
கண்ணின் மணியாய் காந்தியத்தை
காத்து வளர்ப்போம் எனும்சபதம்
பண்ணித் துணிந்து காந்தியத்தை
பரப்பும் பணியைச் செய்திடுவோம்.

2
அன்பும் அறமும் ஞானத்தில்
அழியா நிலையை அடைதற்கு
துன்பப் படுவோர் துயர் நீக்கி
தூய்மை வளர்த்து வாழ்க்கையிலே
இன்பம் நிறைந்து போர்வெறியை
இல்லா தொழித்து அமைதியுடன்
மன்னுயிர் எல்லாம் மகிழ்வெய்தும்
மாபணி இன்றே துவங்கிடுவோம்

3
சாதி சமய நிறபேதச்
சண்டைகள் இன்றி மாந்தர்குலம்
நீதி நேர்மை வழுவாமல்
நேயமாய் வாழ்ந்து நலமெய்தி
ஆதி பகவன் உலகினிலே
அனைவரும் ஒன்றாய் மகிழ்வோடு
சோதி சுடரும் காந்தியத்தின்
தூய்மை பெற்று வாழ்ந்திடுவோம்.

4
ஒன்றே குலமாய் உளத்தெண்ணி
ஒருவனே தேவன் எனப்போற்றி
நன்றே வாழ்ந்து உலகத்தின்
நன்மைக் குழைத்த பெருந்தகை போல்
இன்றே நானும் செய்திடுவேன்
என்று மாந்தர் எல்லோரும்
ஒன்றாய்க் கூடிக் காந்தியத்தை
உலகெலாம் பரப்பி வாழ்ந்திடுவோம்

# திருவள்ளுவர் திருநாள்:

தமிழ்மறை எனவும் பொதுமறை எனவும் போற்றப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் யாவருடையபாராட்டுக்கும் உரியவர், அவருடைய திருநாள் தமிழரின் தனிப்பெருந் திருநாள். தமிழினத்தை ஒன்று படுத்தும் ஒப்பற்ற திருநாள்: அன்பும் அருளும் அறமும் ஆட்சிசெய்யுந் திருநாள். ஆதலினால், சாதி மத பேதமின்றியும், அரசியற்கட்சி வேறுபாடின்றியுந் தமிழ் மக்கள் யாவரும் ஒவ்வொரு வீட்டிலுந் திருவள்ளுவருடைய திருநாளைக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அவருடைய திருநாளை, மாசி உத்தரம் என்று ஒருசாராரும் வைகாசி அனுடம் என்று மற்றொரு சாராரும் கருதுகின்றனர். இதனாலே சில இடங்களில் மாசிமாதத்திலும் வேறு சில இடங்களில் வைகாசி மாதத்திலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இந்த இரண்டு நாட்களில் ஒன்றினைக்கொண்டாடுதலே நல்லது என முடிவுசெய்து, இதுபற்றிய கருத்தினை அறிவிக்குமாறு தமிழ் அறிஞர் சிலருக்கும் தமிழ்ச் சங்கங்கள் சிலவற்றிற்கும் எழுதியிருந்தோம்: பெரும்பாலானோர் வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகக்கொண்டாடுதல் நன்று என அறிவித்தனர். இனி வைகாசி அனுடத்தையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுமாறு தமிழ் மக்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாண்டில் திருவள்ளுவர் திருநாள்
வைகாசித் திங்கள் கரு ஆம் நாளாகிய (28-5-53] வியாழக்கிழமை

இந்நாளைத் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச்செய்வதற்கும் ஆண்டுதோறும் வரும் திருவள்ளுவர் திருநாளை அரசியல் விடுமுறை நாளாக்குவதற்கும் எங்கள் தமிழ் மறைக்கழகம் முயலுகிறது. இம்முயற்சி நன்கு நிறைவேறுதற்கு, இன்றியமையாதனவற்றை செய்யுமாறு தமிழர்கள் வாழுமிடங்களிலுள்ள தமிழர்களின் சங்கங்களையும் கலாசாலைகளையும் மடங்களையும் பத்திரிகைகளையும் தமிழறிஞர்களையும் கேட்டுக்கொள்கிறோம். இதுபற்றிய வேறு செய்திகளை அறியவும் அறிவிக்கவும் விரும்புவோர் தமிழ்மறைக்கழகம் இல 44, 33ம் ஒழுங்கை கொழும்பு 6 எனும் முகவரிக்கெழுதுக;



# சான்றோர் உபதேச சாரம்

[பொன்னாரம்]

உந்தி நத்தினால் உறுவதிங் கொன்றில்லை
உந்தி நம்முடனக் கெங்கிருந் துற்றது?
உன்திறம்வரும் உண்மையை ஓர்ந்துநீ
அன்பு நோக்குடன் ஆய்ந்தறி யாவையும். 30

சுந்தரச்சுடர் சூரியன் கொள்ளவும்
சந்திரன் வசம் தட்பமே சாரவும்
வந்துவீசிட வானத்தில் வளியையும்
தந்ததார்? அந்தத் தயாபரன் ஆர்? அறி. 31

குருவிசாலங்கள் கூவநற் கீதமும்
பருவம் முற்றிய பழங்கட்குச் சாரமும்
உரிய தோற்றமே வித்தில் வந்துறையவும்
தருவதார்? அந்தத் தற்பரன் ஆர்? அறி. 32

நாடும் நல்வள நதிவளம் மலைகளும்
ஈடில்லாதபல இயற்கை வளங்களும்
பாடும் ஓசைப்பேர் ஆழிப்பரப்பெலாம்
தேடித் தந்ததார்? தீவிரம் ஆய்ந்தறி. 33

பாரில் மேகங்கள் பயிர்க்குநீர்பாய்ச்சவும்
ஊரில் வாழும் பல் உயிர்வகை உண்ணவும்
வாரிவாரியே வரையின்றி வழங்குவோன்
ஆர்இக்கோன்? என ஆழ்ந்து நீபார்த்தறி. 34

சூரியன் முதல் சந்திரன் சூழ்தர
பாரில் வான் தனில் பரந்துள பலவுமே
நேரதான நல் ஒழுங்கொடு நிலவுதல்
ஆரின் ஆணையால்? என்பதை ஆய்ந்தறி, 35

நித்தமும் இவை நிலவிட வைத்தருள்
சித்தன் ஆரென ஆய்ந்தபின் அறிகுவாய்
எத்திசை தொறும் எந்த நல் உயிரிலும்
தத்துவப் பொருள் சிவம் எனும் உண்மையை;

[தொடரும்]

Registered at the G.P.O. as a News Paper M. L. 59/300

# சிவத்திரு பாலையசுவாமிகள் மடாலயம்,




## அடிவாரம் பழநி.

## நேயர்களுக்கு விண்ணப்பம்.

1 நேயர்கள் கையில் இப்பத்திரிகை கிடைக்கும்போது 5-ஆண்டில் 4மாதம் கடந்துவிட்டனவென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். சந்தா இன்னுமனுப்பாத அன்பர்களுக்கு அடுத்த மாதத்தில் வி-பி மூலம் அனுப்ப எண்ணியுள்ளோம். ஆதலால் சந்தா அனுப்பாதோர் மார்ச் 15க்கிடையில் சந்தாவை அனுப்பி வைத்தால் பேருபகாரமாயிருக்கும். நீங்களாகவே பணத்தை பி-ஓ மூலம் அனுப்பினால் 10 சதம் மாத்திரமே செலவாகும். வி-பி மூலம் அனுப்பினால் 50 சதம் செலவாகும். ஆதலால் லாபம் கிடைக்க விரும்புவோர் 10 தினங்களுள் சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

2 விலாசமாற்றமுடையோர் தங்கள் சந்தா இலக்கங்களையும் குறிப்பிட்டு பழைய விலாசம் புதிய விலாசங்களையும் விபரமாய் எழுதவேண்டுகிறோம்.

3 இந்தியா அன்பர்கள் சந்தா அனுப்பியவுடன் கடிதம் [illegible] அறிவிக்கவேண்டுகிறோம்.

'ஆத்மஜோதி நிலையம்'

நாவலப்பிட்டி — இலங்கை

[illegible] அச்சகம், நாவலப்பிட்டி